


# யாழ் மாவட்டச் செயலக மடல்

# යාපනය දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලයේ සඟරාව

# Jaffna District Secretariat Bulletin

தை - ஆனி 2021 | மடல் - 02 | இதழ் - 02



021 222 2235
021 222 2233
gajaffna@sltnet.lk


## திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி மத்திய நிலையம் திறப்பு







"சுத்தமான நகரமொன்று - சூழல் நட்புறவான நாடொன்று" என்னும் கருப்பொருளுக்கிணங்க வடமராட்சி கரவெட்டி முள்ளியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள - பொறிமுறை சேதனப் பசளை தயாரிப்பு நிலையமானது 2021.06.27 ஆம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.



## யாழ்ப்பாணத்திற்கு ஐம்பதாயிரம் கொவிட் - 19 தடுப்பூசிகள் வழங்கிய நிகழ்வு





யாழ் மாவட்ட பொது மக்களுக்கு கொவிட் - 19 வைரஸ் தடுப்பூசி வழங்குவதற்கான செயற்றிட்டத்திற்காக முதற்கட்டமாக ஐம்பதாயிரம் கொவிட் - 19 தடுப்பூசிகள் யாழ். மாவட்ட சுகாதார அதிகாரிகளிடம் கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா வட மாகாண ஆளுநர் கௌரவ (திருமதி) பி.எம். சார்ள்ஸ், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் ஆகியோரால் 2021.05.30 ஆம் திகதி காலை யாழ் போதனா வைத்தியசாலை தொகுதியில் வைத்து கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று கள நிலைமைகளை ஆராய்ந்தார்.


**மலர் குழு**

**போசகர்**
திரு.க.மகேசன் (அரசாங்க அதிபர்)

**வெளியீட்டுக்குழு**
திரு.ம.பிரதீபன் (மேலதிக அரசாங்க அதிபர்)
திருமதி.எஸ்.நிக்கொலஸ்பிள்ளை (பணிப்பாளர் - திட்டமிடல்)
திரு.எஸ்.முரளிதரன் (மேலதிக அரசாங்க அதிபர் - காணி)
திரு. என்.எஸ்.ஆர். சிவரூபன் (பிரதம கணக்காளர்)
செல்வி.து.துளசிக்கா (தகவல் உத்தியோகத்தர்)
திரு.வ.நவநீதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**இதழாசிரியர்**
திரு.யே.நிரோஷானந் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)


*மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை கட்டியெழுப்புதலும், கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதுமே பணியாகும்*

# பலாலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக்கட்டடம் திறப்பு





யாழ்ப்பாணம் பலாலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் 2021.06.27 ஆம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் நிகழ்வில், வடமாகாண ஆளுநரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான கௌரவ (திருமதி) பீ.எஸ்.எம் சார்ள்ஸ் அவர்கள், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர் பொறியாளர் [illegible] அவர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## பற்றிக் (Batik) பயிற்சி நிலையம் புங்குடுதீவில் திறப்பு



"சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கைக்கு அமைவாக "உழைக்கும் நாடு, உற்பத்தி செய்யும் குடிமகன், மகிழ்ச்சியான குடும்பம்" என்ற தொனிப்பொருளில் 200 பற்றிக் கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட "பற்றிக் பயிற்சி நிலையம் - புங்குடுதீவு யாழ்ப்பாணம்" திறப்புவிழா மற்றும் ஆரம்ப நிகழ்வு 2021.02.09 ஆம் திகதி அன்று பற்றிக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ தயாசிறி ஜெயசேகர அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கௌரவ (திருமதி) பீ.எஸ். எம்.சார்ள்ஸ் அவர்கள், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இத்துறையின் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் வரை பயிற்சி பெறுவோர் "சௌபாக்கியா கடன் திட்டம்" மூலம் அவர்களுக்கான கடன் வசதி ஏற்படுத்தி தருவதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் கூறியதுடன், இறக்குமதி துறையிலே தற்போது விதிக்கப்பட்டுள்ள தடைகளின் காரணமாக உள்ளூர் உற்பத்திகளை சந்தையில் விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும், இச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி இப் பயிற்சி நெறியை மிகச் சிறப்பாக மேற்கொண்டு உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.





## வீடு கையளிக்கும் நிகழ்வு





யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றினை 2021.04.12 ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் உரிமையாளரிடம் கையளித்தார்.

## வாழ்வாதார அபிவிருத்திக் குழுக் கூட்டம்



கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திக் குழுவின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான முதலாவது கூட்டமானது 2021.03.17 ஆம் திகதி காலை 09.30 மணிக்கு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கமத்தொழில் அமைச்சர் கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வடமாகாண ஆளுநரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் அவர்கள், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்று பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

## உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்தி குழுக் கூட்டம்





கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான முதலாவது கூட்டமானது 2021.03.17 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கௌரவ ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் கம்பனித் தோட்டங்களை சீரமைத்தல், தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச் செய்கைகள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ கனக ஹேரத் அவர்கள், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ லொஹான் ரத்வத்த அவர்கள், வாகன ஒழுங்காற்றுகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்கள், கௌரவ சிவஞானம் சிறீதரன் கௌரவ பிரதேச சபை தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெறுகிறது. பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

## "ஒரு வங்கி ஒரு கிராமம்" வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு




யாழ்ப்பாண மாவட்டத்திற்கான "ஒரு வங்கி ஒரு கிராமம்" வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது யாழ் நெடுங்குளம் கிராமத்தில் 2021.02.03 ஆம் திகதி நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் கௌரவ திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர், மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். "சுபீட்சத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்லும்" அதிமேதகு ஜனாதிபதியினுடைய திட்டத்திற்கு அமைவாக நீண்டகாலமாக கிராமிய மட்டத்தில் உள்ள பிரச்சனையான கிராமிய மக்களையும் வங்கியையும் இணைத்து குறைந்த வட்டியில் இலகுவாக கடன்களை பெற்றுக்கொடுக்க வேண்டிய நடைமுறையை அமைத்து உற்பத்திகளை அதிகரிப்பதே நோக்கமாகும்.



## உருளைக்கிழங்கு பயிர் செய்கை ஊக்குவிப்பு



சுபீட்சம் வேலைத்திட்டத்தின் கீழ் கோப்பாய், தெல்லிப்பளை மற்றும் உடுவில் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 918 உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு பயிர் செய்கைக்கு 50% மானியம் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர். இச்செயற்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா. 18.067 மில்லியன் ஆகும். கமத்தொழில் அமைச்சர் கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையின் கீழ் 2021.03.17ம் திகதி வலிகாமத்தில் [illegible] உருளைக்கிழங்கு பயிர் செய்கைகளைப் பார்வையிட்டனர்.

## சமுர்த்தி வங்கிகள் கணினி மயப்படுத்தல்





## மாணவர்களுக்கான சிப்தொற கொடுப்பனவு



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள 33 சமுர்த்தி வங்கிகள் கணினி மயப்படுத்தப்பட்டது அந்த வகையில் உடுப்பிட்டி வங்கியின் கணினி மயப்படுத்தல் வேலைத் திட்டத்தை சமுர்த்தி பணிப்பாளர்நாயகம் திரு R.P.B திலகசிறி அவர்கள் 2021.02.05 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

மாணவர்களுக்கான சிப்தொற கொடுப்பனவு கோப்பாய் சமுர்த்தி வங்கியில் 2021.02.06 ஆம் திகதி அன்று சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் திரு.R.P.B திலகசிறி அவர்களால் மாணவர்களுக்கான சிப்தொற கொடுப்பனவை வழங்கினார்.

## சமுர்த்தி புத்தாண்டுச் சந்தை





யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களில் சௌபாக்கியா வர்த்தக சந்தை 2021.04.08 தொடக்கம் 2021.04.12ம் திகதி வரையான காலத்தில் நடைபெற்றது. 11 சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தி புத்தாண்டு சந்தை நடைபெற்றது. அந்த வகையில் ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் புத்தாண்டுச் சந்தை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்களால் 2021.04.09 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டு விற்பனைகள் நடைபெற்றன.

## சௌபாக்கியா வாரம் (2021 மார்ச் 2 முதல் 8 வரை)

அதிமேதகு ஜனாதிபதியினால் நாடு முழுவதுமாக மார்ச் 02 - மார்ச் 08 ஆம் திகதி வரையான காலப்பகுதி சௌபாக்கிய வாரம் (சுபீட்சத்தின் நோக்கு) என பிரகடனப்படுத்தப்பட்டு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களை முன்னேற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. சௌபாக்கியா வாரத்தினை முன்னிட்டு மாவட்டச் செயலகத்தில் 2021.03.05 ஆம் திகதி சமுர்த்தி திணைக்களத்தினால் வாழ்வாதார உதவிகள், சமுதாய கடன்கள், புலமை பரிசில் நிதி, வீட்டுத்திட்ட மானிய உதவி வழங்கல், அருணலு கடன் திட்டம் போன்ற பல்வேறு உதவித் திட்டங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.



## குழந்தைகளுக்கான தேசிய மரநடுகை செயற்திட்டம் - 2021



அதிமேதகு ஜனாதிபதியின் சௌபாக்கிய கொள்கையின் அடிப்படையில் "குழந்தைகளுக்கான மரத்தோட்டம்" என்ற தொனிப்பொருளில் தேசிய மரநடுகை வேலைத்திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு 2021.02.15 ஆம் திகதி யாழ். நல்லூர் புனித பெனடிக்ற் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது. முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்ட பிள்ளைகளுக்கு விவசாய ஆராய்ச்சி அமைச்சின் நிதி அனுசரணையில் ரூபா. 1.13 மில்லியன் தொகையில் மாதுளை 1691, தேசி 1805, மா மரம் 3008 மற்றும் பலா மரம் 2445 ஆகிய பழ மரக்கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

## உதவிப் பொருட்கள் உள்ளடங்கிய பொதிகள் மற்றும் கணினிகள் வழங்கல்



பால்நிலைசார் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான சுகாதார உதவிப் பொருட்கள் உள்ளடங்கிய 50 பொதிகள் மற்றும் நல்லூர் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அலுவலர்களுக்கான கணினி ஒன்றும் யாழ் சமூக செயற்பாட்டு மையத்தினால் 2021.02.09 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

## கிராமத்துக்கோர் விளையாட்டு மைதானம் - தேசிய ரீதியிலான அங்குரார்ப்பண நிகழ்வுகள்





அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனையின் கீழ் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இருந்து தலா ஒரு கிராமிய விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்திட்டத்தின் யாழ்ப்பாண பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட விண்ணின் விளையாட்டுக்கழக மைதான அங்குரார்ப்பண நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.மகேசன் தலைமையில் 2021.03.02 ஆம் திகதி ஜானவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக பங்குபற்றி சிறப்பித்தார்.

## யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கௌரவ திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் 2021.02.02 ஆம் திகதி நடைபெற்றது. இக் குறித்த கலந்துரையாடலில் கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், காணி, மீள்குடியேற்றம், வீடமைப்பு, சமூகப் பாதுகாப்பு, மின்சாரம், நீர் விநியோகம், நகர அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் தபால், மற்றும் விசேடமான திட்டங்கள் ஆகியவை தொடர்பாக துறைரீதியாக விரிவாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.





### இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 73 ஆவது சுதந்திர தின விழா




### ஊடகவியலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கல்

யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவும், சிறு வருவிக்கா நிறுவனமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் (Personal Protective Equipments) 2021.02.15 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.



இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 73 ஆவது சுதந்திர தின விழா மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அவர்கள் தலைமையில் 2021.02.04ஆம் திகதி தேசிய கொடி ஏற்றலுடன் மாவட்ட செயலக வளாகத்தில் ஆரம்பமாகியது. சுதந்திர தின நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன், சர்வ மதத் தலைவர்கள், உயர்நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு மரக்கன்றுகள் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## "நீர்ப்பாசன செழுமை" - யாழ் மாவட்ட ஆரம்ப நிகழ்வு

"நீர்ப்பாசன செழுமை" கிராமிய குளங்களை அண்டியுள்ள 5,000 விவசாய நீர்ப்பாசன தொகுதிகளை மறுசீரமைக்கும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் யாழ் மாவட்ட ஆரம்ப நிகழ்வு 2021.02.06 ந் திகதி யாழ் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நெடுங்குளம் கிராமத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக ஆரம்பித்துவைத்தார். இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், கமநல சேவை திணைக்களத்தின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர், அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். யாழ் மாவட்டத்தில் புனரமைப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 83 குளங்களில் 2021 ஆம் ஆண்டு 12 குளங்கள் புனரமைப்பு செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





## சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியம் 'ஆரஸ்சாவ' நிகழ்ச்சித் திட்டம்

சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியம் 'ஆரஸ்சாவ' நிகழ்ச்சித் திட்டத்தில் 2020 ஆம் ஆண்டு மருதங்கேணி, கரவெட்டி, கோப்பாய் பிரதேச செயலகங்களில் சிறப்பாக பங்காற்றிய உத்தியோகத்தர்களிற்கு பிரதேச செயலாளர்களின் தலைமையில் அரசாங்க அதிபர் அவர்களின் வெகுமதி வழங்கும் நிகழ்வானது 2021.03.04 ஆம் திகதி மருதங்கேணி, கரவெட்டி, கோப்பாய் பிரதேச செயலகங்களில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் திரு. க.மகேசன், சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திரு.ம.பிரதீபன், கௌரவ விருந்தினராக சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரியும் கலந்துகொண்டனர். மேலும் பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.



## இழப்பீட்டுக்கான கொடுப்பனவு வழங்கல்



இழப்பீட்டுக்கான தேசிய செயலகத்தினால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உயிரிழப்புக்கள், சொத்து இழப்புக்கள், ஆலய புனரமைப்பு பணிகளுக்காக கொடுப்பனவுகள் 2021.03.01 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான கௌரவ திரு.அங்கஜன் இராமநாதன் அவர்கள் கலந்துகொண்டார். பொது மக்களுக்கான சொத்திழப்பீடு கொடுப்பனவுகள் 134 பொது மக்களுக்கும், மற்றும் பாதிக்கப்பட்டோர்களுக்கான இழப்பீடு (இறப்புக்கான) 11 பொது மக்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கான இழப்பீடுகள் 10 பேரிற்கும், பாதிக்கப்பட்ட 11 வணக்கஸ்தலங்களுக்கான இழப்பீடுகளும் வழங்கப்பட்டன. இதற்காக 16.76 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் 2021.01.0ந் திகதி தொடக்கம் 2021.06.30ந் திகதி வரை 107 திடீர் பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன், 105 முறைப்பாடுகளும் கிடைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நீதிமன்றத்தால் ரூபா.669.000.00 தண்டப்பணம் விதிக்கப்பட்டன.



# தையிட்டியில் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டம் கையளிப்பு







யாழ்ப்பாணம் தையிட்டியின் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோக திட்டமானது 2021.08.27 ஆம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ச அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மேலும் நிகழ்வில், வடமாகாண ஆளுநரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கௌரவ (திருமதி) பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான தலைவருமான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர் ரோஹன் ரணசிங்க அவர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த அவர்கள், இராஜாங்க அமைச்சர் கௌரவ தேனுக விதான கமகே அவர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சர்வதேச மகளிர் தின விழாக்கள்

'நாடும் தேசமும் உலகமும் அவளே' எனும் தொனிப்பொருளில் இவ் வருட சர்வதேச மகளிர் தினம் அனுஸ்டிக்கப்பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் சர்வதேச மகளிர் தினம் மற்றும் யாழ். மாவட்ட பெண்கள் தொழில் முயற்சியாளர்களது உற்பத்திப் பொருள் கண் காட்சியும் விற்பனையும் நிகழ்வு 2021.03.08 ஆம் திகதி நடைபெற்றது. அந் நிகழ்வில் அரசாங்க அதிபர் திரு.க.மகேசன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.









யாழ்ப்பாண மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு 2021.03.23 ஆம் திகதி திருமதி.அனுசியா ஜெயகாந்தன் அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் தற்போதைய வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளருமான திருமதி.ரூபினி வரதலிங்கம் அவர்களும் மேலதிக அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

## பட்டதாரிப் பயிலுனர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு

2019ஆம் ஆண்டு இரண்டாம், மூன்றாம் கட்டமாக பட்டதாரிப் பயிலுனர்களாக நியமிக்கப்பட்டவர்களில் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட 239 பேருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் திரு.ம.பிரதீபன் அவர்களின் தலைமையில் 2021.04.01 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க. மகேசன் அவர்கள் கலந்து நியமன கடிதங்களை வழங்கி வைத்தார்.



## உலர் உணவுப் பொருட்கள் வழங்கல்





யாழ்ப்பாண மாவட்ட செயலக அரசாங்க அதிபர் திரு. கணபதிப்பிள்ளை மகேசன் அவர்களிடம் Paalam project அரச சார்பற்ற நிறுவனத்தினரால் 2021.06.30ஆம் திகதி இருநூறு பேர்களுக்கான 1000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய சுகாதார பாதுகாப்புப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறி





தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தால் அரச உத்தியோகத்தர்களுக்காக நடைபெற்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறியின் இறுதி நாள் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அவர்களின் தலைமையில் 2021.04.09 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தேவைப்பாடுகளைக் கண்டறிய கள விஜயம்






யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு 2021.06.27 ஆம் திகதி விஜயம் செய்த இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் கல்லூரியின் தேவைப்பாடுகளை அறிந்துகொண்டார்.

## இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் யாழ் விஜயம்



யாழ் மாவட்டத்திற்கு இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் Excellency Maj.Ge.(Retd).Muhammad Saad Khattak அவர்கள் 2021.06.30 ஆம் திகதி விஜயம் செய்து மாவட்ட செயலாளர் திரு.கணபதிப்பிள்ளை மகேசன் அவர்களை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். அத்தோடு பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களை யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

## பிரதேச கற்றல் மத்திய நிலையங்களை ஸ்தாபித்தல்





யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நிகழ்நிலை / தொலைக்கல்வி நடவடிக்கைகளுக்கான வசதியில்லாத மாணவர்களுக்கு பிரதேச கற்றல் மத்திய நிலையங்களை ஸ்தாபித்தல் தொடர்பான கலந்துரையாடலானது பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களின் தலைமையில் 2021.06.29 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## பாடசாலைகளுக்கான மடிக்கணினி வழங்கும் நிகழ்வு

திறன் வகுப்பறை (Smart Class Room) திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு மூன்றாம் கட்டமாக மடிக்கணினிகளை வழங்கும் நிகழ்வு அரசாங்க அதிபரின் தலைமையில் 2021.01.27 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் 129 பாடசாலைகளுக்கு மடிக்கணினிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் பங்குபற்றி மடிக்கணினிகளை வழங்கி வைத்தார்.




## அரச சார்பற்ற நிறுவனங்களால் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



கோவிட்-19 தொற்றின் மூன்றாவது அலையின் காரணமாக பயணத்தடையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நலிவுற்ற 1500 குடும்பங்களுக்கான தலா ரூபா 1500.00 பெறுமதியான 1500 உலர் உணவுப் பொதிகள் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் சகல பிரதேச செயலகங்களுக்கும் வழங்குவதற்காக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.மகேசன் அவர்களிடம் 2021.06.12 ம் திகதி கையளிக்கப்பட்டது.



யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கணபதிப்பிள்ளை மகேசன் அவர்களிடம் RDF அரச சார்பற்ற நிறுவனத்தினால் 2021.06.04 ஆம் திகதி கோவிட் 19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட பொது மக்களிற்கான 200 பாதுகாப்பு ஆடை (PPE), 1500 Face mask, 200 முகக் கவசங்கள் Face shield, 200 தொற்றுநீக்கி - Sanitizer ஆகிய அத்தியாவசிய சுகாதார பாதுகாப்பு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.